திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலில் தலை மிகவும் முக்கியமான பகுதியாக இருப்பதால் தலைக்குக் கவசம் அணிய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதைப்போலவே உடலில் மார்பும் முக்கியமான பகுதியாக இருப்பதால் மார்புக்கும் கவசம் அணிய வேண்டும் என்று அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடம்பே முக்கியம்தான்.

திரு. வை. பாலச்சந்திரன் : ஆகவே, மார்புக்கும் கவசம் அணிய வேண்டும் என்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைக் கவசத்திற்கே இந்தப் பாடுபடுத்துகிறபோது உடல் முழுவதும் கவசம் அணிய வேண்டும் என்றால் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுமோ. தலையைப் பாதுகாத்தால் பெரும்பாலான உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்றுதான் இதைச் செய்கிறோம். ஆகவே மார்புக்கு கவசம் அணியும் திட்டம் கொண்டுவரும் நோக்கம் அரசுக்கு இல்லை.

காட்டுமன்னார்கோயில், சிதம்பரம் வட்டங்களில் சாலை பாராமரிப்பை விரிவுபடுத்தல்.

168 (*வினா எண் 9399) திருவாளர்கள் எஸ். ஜெயச்சந்திரன். கே. ஆர் கணபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) காட்டுமன்னார் கோயில் சிதம்பரம் வட்டங்களில் சாலை பாராமரிப்பு விரிவுபடுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள அரசு சாலைகள் முடிந்தவரை நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நிதி வசதிக்கேற்ப சாலைகள் பாராமரிப்பு மேற்கொள்ளப்படும்.

1987 மார்ச் 25]

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் தாலுக்காவில் பெரும்பாலான ஆறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் நெடுஞ் சாலைகள் அமைந்திருப்பதால் அந்த டிவிஷனுக்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை என்பதால் அங்குள்ள சாலைகளைச் சரி யாக நிர்வகிக்க முடியவில்லை என்ற புகார் வந்து கொண்டிருக் கிறது. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து அதிக நிதி ஒதுக்கி தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் பரிசீலனை செய்த பிறகுதான் நிதி ஒதுக்கப்படுகிறது. எந்தெந்த இடத்திலே தன்மைகள் என் னென்ன என்பதையெல்லாம் பார்த்து நிதி ஒதுக்கும்போது பரி சீலனை செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கோரிக்கையை வைத்து வேண்டுமென்றால் போதிய அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதா, நிலை என்ன என்பதை தனியாகப் பார்க்கிறேன்.

உசிலம்பட்டி பசும்பொன் கூட்டுறவுத் தீப்பெட்டி சங்கம்.

169—(*வினா எண். 9511)—திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி பசும்பொன் கூட்டுறவுத் தீப்பெட்டி சங்கம் இலா பகரமான முறையில் செயல்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, இந்தச் சங்கம் இலாப கரமான முறையில் செயல்பட்டு வருகிறதா என்பது. "இல்லை" என்றால் இலாபம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'கேள்விக்கு இடமில்லை' என்று சொல்லி விடு வார்களோ என்று நினைத்தேன். ஆனால் இந்தச் சங்கம் அங்கே